உ

திருச்சிற்றம்பலம்.

# தமிழின் உயர்வு.

இது,

பட்டுக்கோட்டை,

சிவ. மா. இராம. சோக்கலிங்க செட்டியார்

அவர்களால் இயற்றப்பட்டு,

மேற்படியூர்,

வேங்கடசுப்பய்ய சுவாமியார் மடத்தின்

பூஜை செய்கின்ற

கொங்குராயன் நல்லூர்,

சுப்பய்ய தேசிகர் அவர்களால்,

வடக்குமாசிவீதி,

விலாச அச்சுக்கூடத்திற்

கப்பட்டது.

925.

OFFICE OF THE REGISTRAR MADRAS
4- SEP1925
f31 N25
180483

உ

திருச்சிற்றம்பலம்.

---

## தமிழ் தேவ மொழி. இதனை,

மொய்வைத்த வண்டின் செறிசூழன் முரன்றசந்தின்
மைவைத்த சோலை மலயந்தர வந்த மந்த
மெய்வைத்த காலுந் தருஞால மளந்த மேன்மைத்
தெய்வத் தமிழுந் தருஞ்செவ்வி மணஞ்செயீரம்.

(என்று)

பெரியபுராணத்தில், சேக்கிழார் சுவாமிகள் அருளினமையானறிக.

---

## தமிழ் மேன்மையுற்றது. இதனை,

(இராமலிங்கசுவாமிகள் எழுதியது.)

---

ம்-இந்தச் சிறப்பிபலக்கரம் பதினெண் மெய்களு பக்ஷமுடியில் எண் குறிப்பில் நின்ற சிவயோக பூ பாகிய பாதகண்டத்தில் பௌராணிகதத்துவத்தாற் குறிக்கப்பட்ட ஐம்பத்தாறு தேசங்களுள் சுதேசந் தவிர மற்ற ஐம்பத்தைந்து தேசபாஷைகளிலுமில்லா ததாயும், பதினெண் நிலைபுகக் குறிக்கப்பட்ட செந்

P81 N25

தமிழ், கொடுந்தமிழ் எனும் இருமைக்கும் ஒற்றுமை யுரிமையாயும், முத்துறைத் தமிழுக்குள் முதன்மைத் துறையானதும், இருக்கு,யஜுர்,சாமமென்னும்சமஸ் கிருத வேதத்திரயப்பொருள் அனுபவத்தை எளிதில் கற்றுணர்ந்து தெளிந்து அனுபவிக்கிறதற்குப் பரமே சுரனது திருவருளைப்பஞ்சாக்ஷர முத்தொழிற் காரிய மான பஞ்சதசாக்கரியால் பிரத்தியக்ஷா நுபவம் சித் திக்கச் செய்யும் நிலயமானதும்,

ஸ்ரீமணிவாசகர், சம்பந்தர், நாவரையர், சுந்தரர் திருமூலர்முதலிய மகாபுருஷர்களால் சாத்திர தோத் திரங்களாக அருளிச்செய்யப்பட்டிருக்கும் திருவாச கம், தேவாரம், திருமந்திரம் என்னும் பரமார்த்தாகசி யங்களையுடையதும்,

பலநாள் நைஷ்டிக அதிகாரணம்பூண்டு போதகா சிரியர் சந்நிதியில்தாழ்ந்து, சகபாடிகளோடு சூழ்ந்து, சுரஒலி பேதங்களைத் தெரிந்து உழைப்பெடுத்தோதி னும் பாஷியம், வியாக்கியானம், டீக்கா,டுக்கா,டிப் பாணி முதலிய உரை கோள் கருவிப் களைபொருள்

கொள்ளத் தேடவேண்டியதாயும், அவ்வவைகளையும் தேடிக்கைவரினும் அக்கருவிகளால் போதகம் பெற வேண்டியதற்குப்பாஷியக்காரர்கள்,வியாக்கியானகர்த் தர்கள், டீக்காவல்லபர்கள், டீக்காசூசகர்கள் முதலிய போதகஉபபோதகாசிரியர்கள் கிட்டுவது அருமையில் அருமையாயும்இருக்கிற ஆரியம், மகாராட்டிரம், ஆந் திரம் என்ற பற்பல பாஷைகளைப் போலாகாமல், பெரும்பாலும் கற்பதற்கு எண்ணளவு சுருக்கமாயும், ஒலியிலே சாயும், கூட்டமென்னுஞ் சந்தி அதிகசுலப மாயும், எழுதவும் கவி செய்யவும் மிகநேர்மையாயும், அக்ஷர ஆரவாரம், சொல்லாடம்பரம் முதலிய பெண் மையலங்கார மின்றி எப்பாஷையின் சந்தசுகளையும் தன் பாஷையுள்ளடக்கி ஆளுகையால் ஆண்டன்மை யைப் பொருந்திய தான தற்பாஷைக்கே அமைவுற்ற ம்,ற்,ன்—என் னு ம்—முடி, கடு,அடி—சிறப்பியலக்காங் களில் முடிகிலே இன்பானுபவசுத்த மோனநிதத்தைச் சுட்டறச்சுட்டும்இயற்கையுண்மைத்தனித்தகைமைப் பெருமைச் சிறப்பியலொலியாம். உரைகூறிப்போந்த சுத்தசித்தாரிடரீந்த ஆதி முப்பதவுரைப் பொழிப்பு

மருவிபற்கைமல இருளைப் பரிபாக சத்தியால் அருளொளியாக்கி அதற்குள்ளீடான சிதாத்மசிற்கலாசக்தியென்னும் சுத்தஆன்மாவை தகாககரகடன அருட்பெருஞ்சோதி யென்னுஞ் சுத்தசிவானந்த பூரணத்தை சுத்த மோனாதீத வியலால் அநுபவிக்கும் இபற்கை யுண்மையே தமிழ் என்னுஞ்சொற்பொருள் சுட்டின வாறு காண்க. என்று சென்னை, சித்தாந்தப் பத்திரிகையிலே காட்டிய வாற்றானும்,

இந்த நமது தெய்வீகமான தமிழ்ப்பாஷையைக் கொண்டே பற்பலரிஷிகள் கோடிக்கணக்கான வேதாந்த சாஸ்திரங்கள், அளவிறந்த வைத்தியசாஸ்திரங்கள், எண்ணிலாத சோதிஷகிரந்தங்கள், கணக்கற்ற மதண சாஸ்திரங்கள், நிறைபாத மாந்திரீக நூல்கள், அளவுக்குமிஞ்சிய லௌகிக, வைதீக நூல்கள், எண்ணமுடியாத ஈஸ்வர ஞான போதசித்தாந்த நூல்கள் நினைத்தற்கரிய எண்ணுள்ள ஆத்மஞான நூல்கள், பலரசாயன சாஸ்திரங்கள், பாயாகசிப ஞானயோக நூல்கள், ஜடதத்துவ அபாரமான கிரந்தங்கள், பூமிதத்துவ, பிராணதத்துவ, இந்திரியதத்துவ, மனோதத்துவ, விவேகதத்துவ, அஞ்ஞானதத்துவ, விஞ்ஞான

தத்துவ, ஞானதத்துவ, ஆரூடதத்துவ சாஸ்திரங்கள் ஆயிரத்தி ஐந்நூறு, மதாந்தரஸ்தாபன விரிவான பாஷ்யங்கள், மற்றும், ஆகாயம், நக்ஷத்திரம், சந்திரன், சூரியன், இந்திரன், திரிமூர்த்திகள் விஷய அபார அளவின்றிய மஹத்சாஸ்திரங்கள், அநேக இராஜதந்திர நூல்கள், மந்திரயந்திர பூஜா அனுபவ சாஸ்திரங்கள், யோக சாஸ்திரங்கள், மோனயோக நூல்கள், இத்தகைய அதி அற்புதமான அபாரசக்தியுடைய அநேக சாஸ்திரங்கள் நமது அநாதிபாஷையான தமிழில் அருளிச்செய்துள்ளார்கள். பின்னும்மேற்கூறிய சாஸ்திரங்கள் நமது பாரத நாட்டுத்தக்ஷண தேசத்தின் தெய்விகமான சில க்ஷேத்திரங்களிலும் பல முனீஸ்வரர்களாலும் சித்தாதிகளாலும் சமாதி வைப்பில் வைத்துவெகுபந்தோபஸ்துடன் இருக்கிறதுஎன்றும்,

முற்கூறிய சாஸ்திரங்களில் பொதிகைமலையின்மேல் பாரிசமுள்ள அம்பலப்பாறைக்குவடக்கேபுள்ளகடாரிஎன்ற பெரியபாறையில், பதினெட்டுச் சித்தர்களால் அருள்செய்த வைத்திய சாஸ்திரங்கள்

நாற்பது லக்ஷம் கவிகளுடன் நூற்றிநாற்பத்தநான்கு சாஸ்திரங்கள் பாறைக்குள்தேரையர் என்றசித்தரால் வைக்கப்பட்டிருக்கிறது. பொதிகையின் ஆண்டிகண்டம் என்ற இடத்தில் எட்டுலக்ஷம் ரசாயன முறைகள் அடங்கிய இரு நூறு சாஸ்திரங்கள் மதங்காதி ரிஷிகளால் வைக்கப்பட்டிருக்கிறது. இடும்பன் மலை உச்சியில் பானைப்பாரி என்ற இடத்தில் மதன சாஸ்திரம் நாலாயிரம் கொங்கணரால் புதைக்கப்பட்டிருக்கிறது. மதுரைக்கு மேற்கேயுள்ள மயிலாடும் பாறையில் வானசாஸ்திரம் பதினேழுலக்ஷம் சாஸ்திரங்கள் புஜண்ட முனிவரால் வைக்கப்பட்டிருக்கிறது. மருதமலையில் மாந்திரீக சாஸ்திரங்கள் எட்டு லக்ஷம் பிண்ணாக்கீசரால் வைத்திருக்கிறது. பிரான் மலையில் கோரக்கரால் சங்கீத சாஸ்திரம் இருபத்தி நாலாயிரம் செப்பேடு செய்து வைக்கப்பட்டிருக்கிறது. கொல்லிமலை தென் மேற்குக் களிகாரிசம் என்ற பெரிய ஓடையில் பாம்பாட்டிச்சித்தரால் கோடியோக சாஸ்திரங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பச்சைமலையின் கீழ்பாரிசம் பவளக்குன்று என்ற இடத்தில் தந்திரயந்திர சாஸ்திரங்கள் இடைக்காடரால் இருபது லக்ஷம்

சாஸ்திரங்கள் புதைக்கப்பட்டிருக்கிறது. மஹேந்திர மலேயின் மேற்கே வல்லாக்கன் மதில் என்றஇடத்தில் மனோதத்துவ சாஸ்திரப் பிரிவுகள் எண்பதினுயிரம் ரோமச முனிவரால் புதைக்கப்பட்டிருக்கிறது. அழகர்மலேயின் ஆலயத்துக்குள்ளே ஸ்வாமி சன்னிதான பலி பீடத்தின் கீழே வைஷ்ணவாகம சாஸ்திரம் எண்ணுயிரம், யோகஞான சாஸ்திரம் ஆயிரம் புதைபடுத்திச்சுந்தரானந்தர் வைத்திருக்கிறார். விஸ்வாமித்திரர் என்றமஹரிஷியென்பவருக்கே பிற்காலத்தில் அகஸ்திய முனிவரால் சுந்தரானந்தர்யென்ற பெயர் கொடுக்கப்பட்டது. தெய்வமலேயில் கூபாளிபடுக்கையில் அழுகண்ண முனிவரால் ஆகாயகமன அஷ்டமாசித்திநூல்கள் கணக்கில்லாது பூமியில் வைக்கப்பட்டிருக்கிறது பொதிகைமலேயின் உச்சியிலும்மற்றும் சுற்றி நாலு பக்கங்களிலும் அகஸ்திய முனிவரால் அருளிச் செய்த 40 லக்ஷம் யோகநூல்கள், 4000, ரசாயன நூல்கள் 2000, வைத்திய சாஸ்திரங்கள், ஆயிரம் மாந்திரீகநூல்கள், 100, வாதநூல்கள், 10000, வேதாந்த சாஸ்திரங்கள், 12000, சோடகலா ஆரூதாரதத்துவ நூல்கள், 3000, லௌகிக சாஸ்திரங்கள், 400, பாத

நாட்டு,பாகிய நூல்கள், 8000, சித்தர் நூல்கள், 7000, அவதாரபுருஷ நூல்கள், 9000, பிராணதத்துவசாஸ்திரங்கள், 9100 சோதிஷ நூல்கள், சரம், பஞ்சபக்ஷி, கொக்கோகம் முதலியவைகளின் சாஸ்திரங்கள் இரண்டு லக்ஷம், 8000 காயகற்ப நூல்கள், 1700 கருமயோக சாஸ்திரங்கள், நாலாயிரம்ஆகமநூல்கள், 7000 மந்திரசாஸ்திரங்கள், 3007, மதசாஸ்திரங்கள், 1000, மூலிகாரூட நூல்கள் இவ்வித அபாரமான நூல்கள் பல இடங்களில் சமாதியில் வைக்கப்பட்டிருக்கிறது. மஹத்சொரூபப் பிரபஞ்ச லக்ஷண சாஸ்திரங்கள், 900000, வராகமலை அரிசிப்பாறையில் குதம்பைமுனிவரால் வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அதிகசாஸ்திரங்கள் அதிகமாக அனேகமாக புதைக்கப்பட்டிருப்பதை இங்கு கூற எனக்கு அபிப்பிராயமில்லை. மேற் கூறியசாஸ்திரங்கள் பூராவும் தெய்வத்தன்மை பொருந்திய தமிழ் பாஷையிலேயே மஹ ரிஷிகளால் வைக்கப்பட்டிருக்கிறது. என்றும்,

தேவார நகரம், சுத்த அத்வைத அருட்கவி ☞ ஸ்ரீ விலக்ஷணானந்த ஸ்வாமிகள் தெரிவித்தவாற்றானும்,

—:—

Rev P, Percival in his The Land of Veda" says

Perhaps no language combines greater force with equal brevity., and it maybe asserted that no human speech is more close and philosophic in its expression as an exponent of the mind. The language thus specific gives to the mipna readiness and clearness of conception whilst its terseness and philosophic idiom afford equal means of lucid utterence.

தத்துவஞானங்களை மனதுக்குத்தெரியும் வண்ணம் மிகத்தெளிவாக எடுத்துப்போதிப்பதற்கு தமிழ்ப்பாஷையே சாலவும் பொருத்தமானது. உலகத்துள்ள

மற்ற பாஷைகள் அவ்வளவு தகுதியானதல்ல என்று பெர்சிவல் துரை கூறுகின்றார் என்று சென்னை சித்தாந்தப் பத்திரிகையிலே காட்டியவாற்றானும்,

செந்தமிழ் நிலத்து மொழியோடு முற்பட்டுத் தோன்று நூலென்றது அம்மொழிதோன்றுங் காலத்துடன் றோன்றிய நூலென அதன்றொன்மை கூறிய வாறாயிற்றென்பது. எனவே, அகத்தியமென்பது பெற்றாம். அற்றேல், முந்து நூல் கண்டெனப்பொதுப்படக் கூறுதலானும், அகத்திய நிறைந்த தொல்காப்பிய னென்னுமையானும், நூலுள்ளும் கடி நிலையின்றே யாசிரியற்க எனப்பிறுண்டும்பொதுப்படக்கூறுதலானும், அகத்தியமே முதனூலென்பது துணியப்படாதாம் பிறவெனின், நூலெனப்பொதுப்படக் கூறாது நிலத்தொடு முந்துநூலென விசேடித்தலின், செந்தமிழ் நிலத்து மொழிதோன்றுங் காலத்துடன் றோன்றிய நூல்அகத்தியமொன்றேயாகலானும் ஏனை நூல்களெல்லாம் அகத்தியத்தின் வழித்தோன்றியன வேயா மாகலானும், ஐந்திர நோக்கித் தொகுத்தானெனின்,

தமிழ் மொழிப் புணர்ச்சிக்கட்பமிஞ் செய்கைகளும், குறிபீடுகளும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாருபாடுகளும், அகம்புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுளிலக்கணமும், இன்னோன்ன பிறவும் வடமொழியிற் பெறப்படாமையானும், இவையெல்லாந் தாமே படைத்துக் கொண்டு செய்தாரெனின், முந்து நூல்கண்டென்பதனோடு முரணுதலானும் முற்காலத்து முதனூல் அகத்தியமென்பதூஉம் அதன்வழித்தாகிய தொல்காப்பியம்அதன் வழி நூலென்பதூஉந் துணிபப்படுமென்க. என்று தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் சிவஞானசுவாமிகள் காட்டியவாற்றானும் அறிக.

ஆரியர் குற்றத்தைச் செய்தனர். இதனை,

தமிழ் மொழி வரலாறு பக்கம் 14, 15, 1903-வருஷத்திப பதிப்பு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரி. வட மொழியாளர் தமிழர்களது ஒழுக்க

வழக்கங்களை உணர்ந்து அவற்றிற்கேற்ப வடமொழியில் நூல்கள்வகுப்பான் புகுந்தனர். அவர்களெல்லாம் தமிழர்கள் ஆன்ம நூற் பயிற்சி மிக்குடையராயும் கலையுணர்ச்சி சான்றவராயும்இருந்தமைபற்றித் தமிழரது திவ்விய ஸ்தலங்களுக்குப் புராணங்கள் வகுத்தனர்.

தமிழரிடத்திருந்த பல அரிய விஷயங்களையும் மொழி பெயர்த்துத் தமிழர் அறியு முன்னமே அவற்றைத்தாம் அறிந்ததுபோலவும், வடமொழியினின்றுமே தமிழிற்கு அவை வந்தனபோலவும் காட்டினர், என்று, சிந்தாந்தப் பத்திரிகையில் காட்டியவாற்றானறிக.

சைவ சித்தாந்தம் சிறந்தது. இதனை,

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் பத்திரிக்கையில் 20-தொகுதி 9-ம்பாகத்தில் கனம். இ. கவுடி துரையவர்கள் வரைந்துள்ள சில அபிப்பிராயத்தைப் பின் வரைகின்றோம். சைவ சிந்தாந்தத்தைப்போன்று நம்முடைய சிந்தையைக்கவாத்தக்கதுவேறெந்தசமய

மும், ஆசாரமும், பொருளும் இன்று.இந்தமதம் அதி பூர்வமாயுள்ள பெருமைவாய்ந்தது. பொருளில் தென்னிந்தியாவின் அதிபூர்வகாலந் தொடங்கி வந்துள்ள எல்லா உண்மைகளையும் தனக்கு ஆஸ்தியாகக்கொண்டது. தமிழர்களுடைய சொந்த மதமெனக்கிடந்தது. இச்சமயத்தை நோக்கமற்றெல்லாமதங்களையும் சற்றுப் புறம்பென்றே தள்ளவேண்டும்.

இச்சமயத்தாரின் பெருந்தொகையை முன்னிட்டும், அப்பொருள்களில்சிலவற்றின் அதிபூர்வீகத்தை முன்னிட்டும் சைவசித்தாந்தம் தமிழர்களுக்கே உரியதாகும். ஆனால் கிறிஸ்துவப் பாதிரிமார்கள் அதனைப் படிப்பது அதிக அவசியமாகும்.

இன்னும் இதன் அதிக சிறப்பாகக் கூறவேண்டிய அம்சத்தை இறுதிவரை கூறுது நிறுத்தினம். அதாவது சமயப் பொருள்களிலும் பக்தியொழுக்கலத்திலும் தென்னிந்தியாவிலுள்ள எல்லா மார்க்கங்களிலும் சைவசித்தாந்தம்உயர்வறச்சிறந்ததென்பது. அற்றன்று இந்தியா முழுதினுமே இது சிறந்துள்ள

தென்று கூறினும் தவறாகா. அதன் உண்மையை நீதி யாக ஆராயுமிடத்து இந்திய சமய சாஸ்திரங்களில் அதி உன்னத நிலையைப் பொருந்தியிருக்கிற தென் பது தெற்றென வெளிப்படும். இதில்கிறிஸ்தவப்போ தத் தொடர்பை நாம்சேர்த்துப்பார்க்கவில்லே. என்று, கடவுளின் சொரூபம் பதியிலக்கணம் சைவ சித்தாந் தத்தின்படி என்றபுத்தகத்திலே குண்டூர், டிஸ்டிரிக்ட் முன்சிப் ஜே. எம். நல்லசாமிப்பிள்ளை அவர்கள் காட் டினமையானறிக.

---

தமிழ் நாட்டில் இருக்கின்ற சிவாலயங்களின்

சிவலிங்கங்களை ஆரியர் பூசிக்கஉரிமைஇல்லை.

இதனை,

பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றன்னையர்ச்சித்தாற்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லாவியாதியாம்
பார்கொண்ட நாட்டிற்குப் பஞ்சமுமா மென்றே
சிர்கொண்ட நந்திதெளிந்துரைத்தானே. என்ற,

திருமந்திர நூற்செய்யுளானறிக!

அதனைக் கடைப்பிடித்தே சிவாலயங்களின் மூல ஸ்தானத்துக்கருகில் ஆரியர் செல்லப்படா தென்று வழக்கம் இருக்கின்றது.

---

## இறுதியுரை.

தமிழ் தேவமொழி என்றும், தமிழ் மேன்மையுற்றது என்றும், ஆரியர் குற்றத்தைச் செய்தனர் என்றும், சைவ சித்தாந்தம் சிறந்தது என்றும், தமிழ் நாட்டில் இருக்கின்ற சிவாலயங்களின் சிவலிங்கங்களை ஆரியர் பூசிக்க உரிமையில்லை என்றும், அதனைக் கடைப்பிடித்தே சிவாலயங்களின் மூல ஸ்தானத்துக் கருகில் ஆரியர் செல்லப்படாதென்று வழக்கம் இருக்கின்றது என்றும் கொள்க.

180483